## செப்டம்பர் – 01 – சனி

### “பெருமை பாராட்ட விரும்புகிறவர் ஆண்டவரைக் குறித்தே பெருமை பாராட்டட்டும்” 1 கொரி 1: 31

### முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 1 : 26 – 31

சகோதர சகோதரிகளே, நீங்கள் அழைக்கப்பட்ட நிலையை எண்ணிப் பாருங்கள். மனிதக் கணிப்பின்படி உங்களுள் ஞானிகள் எத்தனைபேர்? வலியோர் எத்தனை பேர்? உயர்குடி மக்கள் எத்தனை பேர்?. ஆனால் கடவுள் ஞானிகளை வெட்கப்படுத்த, மடமை என உலகம் கருதுபவற்றைத் தேர்ந்துகொண்டார். அவ்வாறே, வலியோரை வெட்கப்படுத்த, வலுவற்றவை என உலகம் கருதுபவற்றைத் தேர்ந்துகொண்டார். உலகம் ஒரு பொருட்டாகக் கருதுபவற்றை அழித்துவிட அது தாழ்ந்ததாகக் கருதுபவற்றையும் இகழ்ந்து தள்ளுபவற்றையும் கடவுள் தேர்ந்தெடுத்தார். எவரும் கடவுள் முன் பெருமைபாராட்டாதபடி அவர் இப்படிச் செய்தார். அவரால்தான் நீங்கள் கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டிருக்கிறீர்கள். கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம். அவரே நம்மை ஏற்புடையவராக்கித் தூயவராக்கி மீட்கின்றார். எனவே மறைநூலில் எழுதியுள்ளவாறு, ”பெருமை பாராட்ட விரும்புகிறவர் ஆண்டவரைக் குறித்தே பெருமை பாராட்டட்டும்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தமது உரிமைச் சொத்தாகத்
தேர்ந்தெடுத்த மக்கள் பேறுபெற்றோர்.

### நற்செய்தி : மத்தேயு 25 : 14 - 30

அக்காலத்தில் இயேசு தமது சீடர்களுக்குக் கூறிய உவமை : ”விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சி வாயிலாகவும் விளக்கலாம் நெடும் பயணம் செல்லவிருந்த ஒருவர் தம் பணியாளர்களை அழைத்து அவர்களிடம் தம் உடைமைகளை ஒப்படைத்தார். அவரவர் திறமைக்கு ஏற்ப ஒருவருக்கு ஐந்து தாலந்தும் வேறொருவருக்கு இரண்டு தாலந்தும், இன்னொருவருக்கு ஒரு தாலந்தும் கொடுத்துவிட்டு நெடும் பயணம் மேற்கொண்டார். ஐந்து தாலந்தைப் பெற்றவர் போய் அவற்றைக்கொண்டு வாணிகம் செய்து வேறு ஐந்து தாலந்து ஈட்டினார். அவ்வாறே இரண்டு தாலந்து பெற்றவர் மேலும் இரண்டு தாலந்து ஈட்டினார். ஒரு தாலந்து பெற்றவரோ போய் நிலத்தைத் தோண்டித் தம் தலைவரின் பணத்தைப் புதைத்து வைத்தார். நெடுங்காலத்திற்குப் பின் அந்தப் பணியாளர்களின் தலைவர் வந்து அவர்களிடம் கணக்குக் கேட்டார். ஐந்து தாலந்து பெற்றவர் அவரை அணுகி, வேறு ஐந்து தாலந்தைக் கொண்டு வந்து, ”ஐயா, ஐந்து தாலந்தை என்னிடம் ஒப்படைத்தீர் இதோ பாரும், இன்னும் ஐந்து தாலந்தை ஈட்டியுள்ளேன்” என்றார். அதற்கு அவருடைய தலைவர் அவரிடம், ”நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே, சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர். எனவே பெரிய பொறுப்புகளில் உம்மை அமர்த்துவேன். உம் தலைவனாகிய என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்கு கொள்ளும்” என்றார். இரண்டு தாலந்து பெற்றவரும் அவரை அணுகி, ”ஐயா நீர் என்னிடம் இரண்டு தாலந்து ஒப்படைத்தீர். இதோ பாரும், வேறு இரண்டு தாலந்து ஈட்டியுள்ளேன்” என்றார். அவருடைய தலைவர் அவரிடம், ”நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே, சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்குரியவராய் இருந்தீர். எனவே பெரிய பொறுப்புகளில் உம்மை அமர்த்துவேன். உம் தலைவனாகிய என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்குகொள்ளும்” என்றார். ஒரு தாலந்தைப் பெற்றுக் கொண்டவரும் அவரையணுகி, ”ஐயா, நீர் கடின உள்ளத்தினர் நீர் விதைக்காத இடத்திலும் போய் அறுவடை செய்பவர் நீர் தூவாத இடத்திலும் விளைச்சலைச் சேகரிப்பவர் என்பதை அறிவேன். உமக்கு அஞ்சியதால் நான் போய் உம்முடைய தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன். இதோ, பாரும், உம்முடையது” என்றார். அதற்கு அவருடைய தலைவர், ”சோம்பேறியே! பொல்லாத பணியாளனே, நான் விதைக்காத இடத்திலும் போய் அறுவடை செய்பவன். நான் தூவாத இடத்திலும் போய் சேகரிப்பவன் என்பது உனக்குத் தெரிந்திருந்தது அல்லவா? அப்படியானால் என் பணத்தை நீ வட்டிக்கடையில் கொடுத்து வைத்திருக்க வேண்டும். நான் வரும்போது எனக்கு வரவேண்டியதை வட்டியோடு திரும்பப் பெற்றிருப்பேன்” என்று கூறினார். ”எனவே அந்தத் தாலந்தை அவனிடமிருந்து எடுத்துப் பத்துத் தாலந்து உடையவரிடம் கொடுங்கள். ஏனெனில் உள்ளவர் எவருக்கும் கொடுக்கப்படும். அவர்கள் நிறைவாகப் பெறுவர். இல்லா தோரிடமிருந்து அவரிடமுள்ளதும் எடுக்கப்படும். பயனற்ற இந்தப் பணியாளைப் புறம்பேயுள்ள இருளில் தள்ளுங்கள். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும்” என்று அவர் கூறினார்.

**தியானம்:** இருப்பதை விட்டு விட்டு இல்லாத ஒன்றைதேடி ஓடுவது தான் மனிதவாழ்வாகிவிட்டது. நம்மிடம் இருக்கும் நல்லகுணங்களை, திறமைகளை தெரிந்து கொள்ளாமல், மற்றவர்களிடம் இருக்கும் திறமைகளை பார்த்து ஏங்குகின்ற மனநிலையில் தான் நம்மில் பலர் வாழ்கின்றோம். சிலதிறமைகள் நமக்குள் துருப்பிடித்திருக்கும். சந்தர்ப்பம் வரும்போது அது வெளிப்படுத்தப் படுகின்ற போது நமக்கே ஆச்சரியமாக இருக்கும். சிலதிறமைகள் மற்றவர்கள் பாராட்டும் போது தான் அது நமக்குள் இருக்கும் திறமை என்று எம்மால் அறியக்கூடியதாக இருக்கும். சிலதிறமைகள் நாம் பயன்படுத்தாமல் விட்டு விட்டால் அது நம்மிடம் இருந்து மறைந்துவிடும். உதாரணமாக சிலர் இளமையில் நன்றாக இசைக்கருவிகளை மீட்டுவார்கள். காலப்போக்கில் நேரம் இல்லை என்று அதனை மீட்டுவதை நிறுத்திவிட்டால், அது மறக்கப்பட்டதாக போய்விடுவதும் உண்டு. திறமைகள் எவ்வாறு ஒருவருக்கு ஒருவர் வேறுபடுகின்றது என்பதனை இன்றைய நற்செய்தி மூலம் நாம் அறியலாம். அது நமக்கும் ஒருபடிப்பினையாக தரப்பட்டுள்ளது. இறை அரசை நோக்கிய நமது பயணத்தில் நாம் மண்ணில் தோண்டி புதைக்கப் பட்ட தாலந்தாக இருக்கமுடியாது. நமது எண்ணங்களும் சிந்தனைகளும் செயல்களும் நல்லவைகளாக, நேர்மையானதாக வெளிப்படைத் தன்மை உடையதாக இருக்கவேண்டும். மறைவாக இருக்க முடியாது, மனிதருக்குமறைவாக இருந்தாலும் இறைவன் முந்நிலையில் வெளிப்படுத்தப் பட்டே தீரும். எனவே இச்சிந்தனையுடன் நம் திறமைகளை இறைவனுக்கு ஏற்றமுறையில் வளர்த்துக்கொள்வோம்.